**சேருவில பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சேருவில பிரதேச சபையின் நிதி நிலமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளைச் சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் சபை கொள்வனவு செய்த ரூபா 63,000 பெறுமதியான 2 டிறக்டர்களும் டிரெய்லர்களும் மூலதனமாக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் டிசெம்பரில் உடன்படிக்கை கைச்சாத்தான 10 நிர்மாண வேலை ஒப்பந்தங்களுக்குரிய வேலைகள் ஆரம்பிக்காதிருக்கும் நிலையில் மதிப்பிடப்பட்ட பெறுமதியாகிய ரூபா 1,982,371 கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூபா 350,438 மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டிருந்ததால் கடன்பட்டோரும் மூலதனச் செலவினமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

மூன்று ஒப்பந்தங்களது பெறுமதி ரூபா 608,336 ஆகும். இவற்றிற்குரிய நிறுத்தி வைத்த தொகையைக் குறிக்கும் உடன்படிக்கை, கொடுப்பனவு உறுதிச்சான்று மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 129 ஆம் பிரிவு | நடைமுறைக் கணக்கு 233100110000050 இலக்கமுடைய கணக்கின் ரூபா 284,533 மீதி சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த ரூபா 196,470 பெறுமதியான 03 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2014 ஆம் ஆண்டிற்குரிய திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புத் தொகையாகிய ரூபா 186,550 மற்றும் 2011 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்குரிய நிறுத்தி வைத்த தொகையாகிய ரூபா 556,490 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது அவற்றை வருவாயிலிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவை | |
| (i) 59 ஆம் விதி | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபார மற்றும் தொழில்கள் தொடர்பாகக் கணிப்பு மேற்கொள்ளப்படவேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கென அவ்வாறான கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| (i) 61 ஆம் விதி | 2016 ஆம் ஆண்டின் பொருட்டு வர்த்தகச் சந்தை அனுமதிப்பத்திரப் பதிவேடு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பேணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 143 ஆம் விதி | திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு, நிறுத்தி வைத்த பணம், நூலக வைப்பு மற்றும் ஏனைய வைப்புகளுக்கு வெவ்வேறு கணக்குகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயினும், சபை அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. |
| (iv) | 217 ஆம் விதி | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (இ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குரிய 10 வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,645,655 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,642,265 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேறு ரூபா 1,003,390 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருவாய் ரூபா 4,808,403 அதிகரித்தமையே மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறு ரூபா 1,003,390 அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்**

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | **2016 ஆம் ஆண்டு** | |
|---|---|---|---|
| **வருவாய்க்கான விடயம்** | **மதிப்பிடப்பட்ட வருவாய்** | **உள்ளவாறான வருவாய்** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| குத்தகை வாடகை | 3,245 | 3,195 | 953 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 656 | 720 | - |
| ஏனைய வருவாய் | 4,326 | 10,200 | - |

**2.2.2 முத்திரைக் கட்டணம்**

கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாகப் பெற வேண்டிய தொகையை இணங் காண்பதற்கும் அதனைப் பெறுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையீன்மை**

**ஆயுர்வேத வைத்திய நிலையத்தை பராமரித்தல்**

பிரதேச சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் ஓராண்டில் ஏறக்குறைய 1200 நோயாளர்கள் சிகிச்சை பெற்றிருந்தபோதும், இங்கிருந்த மருத்துவ உத்தியோகத்தர் வேறொரு இடத்திற்கு மாற்றலாகிச் சென்றதன் பின்னர் மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் 2014 யூன் தொடக்கம் வைத்திய நிலையம் மூடப்பட்டிருந்தது. இதனால் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேச மக்களுக்கு சேவை வழங்கி அவர்களது சுகாதார மட்டத்தை மேன்மையடையச் செய்யும் நோக்கம் ஈடேறாதிருந்தது. மேலும், ஆயுர்வேத வைத்திய நிலையம் மூடப்பட்டமையால் அங்குள்ள ரூபா 61,665 பெறுமதியான 51 வகை மருந்துகளைப் பயன்படுத்த முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

**(அ) காணியைச் சுவீகரிக்காது நிர்மாண வேலையை மேற்கொள்ளுதல்**

வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகம் என்பவற்றிற்குச் சொந்தமான காணிகளில் சபையானது 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 85,862,048 பெறுமதியான விளையாட்டு மைதானம், பொதுக் கிணறுகள், சனசமூக நிலையங்கள், நீர்த்தாங்கிகள், மயானங்கள், பொது வர்த்தக நிலையங்கள் என்பவற்றை நிர்மாணித்திருந்தது. எனினும், இக்காணிகளது சட்டபூர்வ உரித்தைச் சபை சுவீகரித்திருக்கவில்லை.

**(ஆ) LED விளம்பரப் பலகைகளைத் தயாரித்தல்**

பிரதேச சபை விளம்பரப் பிரசாரத்திற்கான LED விளம்பரப் பலகையைப் பொருத்துவதற்குச் சபையின் நிதியிலிருந்து 2014 மார்ச் 10 ஆந் திகதி செலவழித்திருந்த தொகை ரூபா 938,000 ஆகும். இவ்விளம்பரம் மற்றும் பிரசாரம் செய்யக்கூடிய விளம்பரங்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் 2017 மார்ச் 17 முதல் இது செயற்படாது போனது. இதற்கெனச் செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாகியது.

**(இ) பிரதேச சபை கராஜை நிர்மாணித்தல்**

சபைக்குரிய வாகனங்களைத் தரித்து வைப்பதற்கு 2015 மே 18 ஆந் திகதியன்று சபையின் நிதியிலிருந்து ரூபா 493,250 செலவில் கராஜ் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கராஜ் முறையாக நிர்மாணிக்கப்பட்டதாகப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு 44 GI குழாய்களுக்கும் குழாய்களை வளைப்பதற்குமென ரூபா 134,400 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், உள்ளவாறு பயன்படுத்தப்பட்டது 35 GI குழாய்கள் மாத்திரமே. குழாய்கள் வளைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 35,150 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) கராஜை நிர்மாணிக்கும்போது குறைந்த கன பரிமாணத்துடன் நிலத்தில் கொங்கிறீட் இடப்பட்டதால் சில இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன.

**(ஈ) கடைகளைக் குத்தகைக்கு வழங்குதல்**

சபைக்குரிய கடைகள் மற்றும் வாடி வீடுகளிலிருந்து 2011 முதல் 2016 வரை பெற வேண்டிய வாடகை வருவாயான ரூபா 899,845 அறவிடப்படுவது 2017 மே 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

**(உ) நோக்கத்திற்கு முரணான செலவினம்**

பிரதேச சபைகளைச் சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டில் சேருவில பிரதேச சபைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 500,000 ஆகும். எவ்வாறாயினும், சபை குறிப்பிட்ட நோக்கத்திற்கு முரணாக 2016 டிசெம்பர் 29 ஆந் திகதியன்று ரூபா 89,600 பெறுமதியான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்தது.

**(ஊ) வருவாய்க்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுதல்**

2017 ஆம் ஆண்டின்போது 08 வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைச் சபை குறித்த தினத்தில் பெறாமையால் ரூபா 9,050 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களின் கவனக் குறைவால் சபைக்கு ஏற்பட்ட இழப்பாக கணக்காய்வில் இது அவதானிக்கப்பட்டது.

## 3.3 செயற்பாட்டு நிர்வாகம்

### 3.3.1 புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - ரூபா 27,709,341

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கட்டிடத்தில் அமைக்கப்பட்ட 105 கண்ணாடி யன்னல்களுக்குப் பொறியிலாளரின் மதிப்பீட்டிற்கமைய கிறில் (Grill) பதிப்பதற்கு 140 கதுர அடிக்கு ரூபா 630,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், அது நடைபெறாமையால் சபையின் பாதுகாப்புக் கேள்வி குறியாகலாம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கழிவறையில் நீர்க் கசிவு இருப்பதால் நீர் வழிந்தோடி கட்டிடத்தில் அமைந்துள்ள இரு கழிவறைகளையும் பயன்படுத்த முடியாதிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 18 ஆம் திருத்த அதிகாரச் சட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய) ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 30,065,945 உடன் தொடர்புடைய

தொழில் சான்றிதழ் நிதிய வரி (GIGFL) ஆகிய ரூபா 75,165 நிறுத்தி வைக்கப்பட்டு அதனை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) இக்கட்டிடத்தின் கூரை முறைப்படி வேயப்படாததால் மேல் மாடியில் நீர் தேங்கி அங்குள்ள யன்னல், சீலிங் என்பவற்றினூடாக கீழ் மாடியின் திறந்த வெளியில் மழை நீர் புகுவதால் கட்டிடத்தினுள் பணியாற்றுவது வசதியற்றதாக இருந்தது.

(உ) மேற்படி குறைபாடுகள் நிலவியபோதும், குறித்த ஒப்பந்தகாரரின் மூலம் அவற்றைத் திருத்தி அமைக்காது 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய 232 ஆம் இலக்கக் கொடுப்பனவு உறுதிச் சான்றின் மூலம் நிறுத்தி வைத்த தொகையான ரூபா 1,385,467 செயலாளரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.3.2 சேருநுவர மயானம்

மயானத்திற்கான தேவை தொடர்பாக முறைப்படி சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளாது பிரதேச சபையானது புரநெகும (NELSIP) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 16 மில்லியன் செலவில் 2014 ஆம் ஆண்டில் மயானத்தை அமைத்திருந்தது. 2017 மே 31 ஆந் திகதியளவில் இறந்தவர்களது 5 உடல்கள் மாத்திரமே தகனம் செய்யப்பட்டிருந்தன. இதற்கமைய, செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 3.3.3 புரநெகும செயற்திட்டத்தின் கீழ் லிங்கபுரம் நூலகத்தை நிர்மாணித்தல் - ரூபா 5,613,650

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இக்கட்டிடத்தினுள்ளே நிலத்தில் சீமெந்து இடப்பட்டிருந்த போதும், முறையான நியமத்துக்கேற்ப அமையாததால் நிலத்தில் உள்ள சீமெந்து அநேக இடங்களில் வெடித்துக் காணப்பட்டது. அதனால் இது நெடுங்காலப் பாவனைக்கு உகந்ததாக அமையவில்லை.

(ஆ) ஒப்பந்த வேலை முடிவடைந்து 2016 நவம்பர் 14 ஆந் திகதியளவில் சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், வேலை முடிவடைந்ததைக் குறிக்கும் சான்றிதழ் 2017 மார்ச் 15 ஆந் திகதியன்றே வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 04 மாத காலத்திற்குத் தண்டப் பணமாக ரூபா 336,819 கழித்துக் கொள்ளப்படவில்லை.

(இ) நூலகத்தில் White Board பொருத்தப்படுவதற்கு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 35,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும் அது பொருத்தப்படவில்லை.

(ஈ) நூலக வளாகத்தில் 40 மரக் கன்றுகளை நட்டு அவற்றை 06 மாதங்களுக்குப் பராமரிப்பதற்கு ரூபா 160,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அம்மரக் கன்றுகள் முறையான பராமரிப்பின்மையால் 06 கன்றுகள் அழிவடைந்திருந்தன. அவற்றின் பொருட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 24,000 பயனற்ற செலவினமாகியது.

### 3.3.4 சேருநுவர வாரச் சந்தை பொதுக் கழிவறையை நிர்மாணித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாரச்சந்தை வளாகத்தில் கழிவறை ஒன்றை பிரதேச சபை நிர்மாணித்திருந்தது. வேலை முடிவடைந்ததைக் குறிக்கும் சான்றிதழ் 2016 டிசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டபோதும், விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட ரூபா 25,406 பெறுமதியான பணிகள் 2017 மே 31 ஆந் திகதியளவிலும் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) வேலை இலக்கம் 14 இன் கீழ் 1:3 எனும் விகிதத்திலான சீமெந்துக் கலவையானது 20 mm கனப்பரிமாணத்துடன் மட்டுப்படுத்தப்பட்டு, நிலத்தில் சீமெந்திடப்பட வேண்டுமாயினும், மட்டுப்படுத்தும் வேலை மாத்திரம் நடைபெற்றிருந்தது. அவ்வாறே, சுவர்களின் உள்ளேயும் வெளியேயும் இருமுறை மை பூசப்பட வேண்டுமாயினும், ஒரு தடவை மாத்திரமே மை பூசப்பட்டிருந்தது. மேற்படி வேலைகள் முற்றாக நிறைவேற்றப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தி ரூபா 37,613 க்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.3.5 சிறு கற்களைப் பயன்படுத்தி வீதியைப் பழுதுபார்த்தலும் நிர்மாணித்தலும்

2015 டிசெம்பர் 30 ஆந் திகதிய நிதி ஆணைக்குழுவினது 2016/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 1.2 வழிகாட்டலுக்கு முரணாக பிரதேச சபையானது பிரதேச சபைகளை சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 03 வீதிகளில் சிறு கற்களைப் பரவி அவற்றைச் சீர்செய்திருந்தது. இதற்குச் செலவான தொகை ரூபா 743,820 ஆகும்.

### 3.3.6 ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தங்கள்

சபையினது நிதியத்தின் கீழ் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,982,371 மதிப்பீட்டுப் பெறுமதியிலான 10 ஒப்பந்த உடன்படிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் டிசெம்பரில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் குறித்த ஒப்பந்த வேலைகள் 2017 மே 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

### 3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 675,000 பெறுமதியான டபள் கெப் வண்டியினது முன்பக்க பார் மற்றும் டயர் என்பவை மாற்றப்படாததால் 2 ½ ஆண்டுகளாகவும் ரூபா 1,000,000 பெறமதியான மஹேந்திரா கெப் வண்டியினது டீசல் தாங்கியில் நிலவிய கோளாறுகள் காரணமாக 4 ஆண்டுகளாகவும் அவை பயன்படுத்தப்படாதிருந்தன.

### 3.5 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்ளை வழங்குதல்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23''அ'' பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களை பெற வேண்டிய 12 வியாபாரங்களிற்கு சபையால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சேருநுவர பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின்போது பின்வரும் விடயங்கள் வெளியாகின.

(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்குத் தேவையான காணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு பிரதேச சபைத் தலைவர் 2013 ஆம் ஆண்டில் வேண்டுகோள் விடுத்ததற்கமைய வனசீவராசிகள் திணைக்களம் 0.4 ஹெக்டெயார் காணி ஒன்றை சேருவில கிட்டுவ பிரதேசத்தில் வழங்கியிருந்தபோதும் சபை சேகரிக்கும் கழிவுப் பொருட்கள் அவ்விடத்தில் அகற்றப்படாது முறையற்றவாறு வனசீவராசிகள் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி ஒன்றில் அப்புறப்படுத்தப்பட்டவாறிருந்தது.

(ஆ) மாதாந்தம் ஏறக்குறைய 30 தொன் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிபார்சுகளுக்கமைய கழிவுப் பொருட்கள் வெவ்வேறாக்கப்படவில்லை. இவை காட்டு யானைகளது வசிப்பிடத்திற்குச் சவாலாக அமைந்தன. காணியைச் சூழவர மின்வேலிகளை அமைத்து முறையாகக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பிரதேச சபை 2017 மே 30 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளவில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் முதல் வெற்றிடமாக உள்ள ஆயுர்வேத வைத்தியரது பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நூலகர், மின்சாரத் தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருவாய் பரிசோதகர் ஆகிய பதவிகளில் 04 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை | கவனம் மேற்கொள்ளப்பட வேண்டிய துறை |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கீடு, துணைப் பதிவேடுகளைப் பேணுதல் |
| (ஆ) | வருவாய் நிர்வாகம் | வருவாய் நிலுவையை அறவிடுதல், வருவாய் பதிவேட்டை பேணுதல். |
| (இ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேட்டைப் பேணுதல் |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தத் தொகையைக் கொடுப்பனவு செய்தல், உடன்படிக்கைகளுக்கேற்ப பணிகளை நிறைவடையச் செய்தல். |
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |